சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

அசல் வழக்கு எண்.355/2024 நாள்- 17.11.2025

வா.சா.1. ஆதவன்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பில்

என் உடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள் மற்றும் என்னுடன் சேர்ந்து 5 சகோதரர்கள். எங்களுக்குள் எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.16 என்றால் சரிதான். வா.சா.ஆ.16 எழுதிக் கொள்வதற்கு முன்பாக எங்களுக்கு பாத்தியப்பட்ட அனைத்து செசாத்துக்களும் கூட்டாக தான் அனுபவம் செய்து வரப்பட்டது என்றால் சரிதான். இதன் அடிப்படையில் தான் சொத்துக்கள் பிரிக்கப்பட்டு என் சகோதர சகோதரிகள் தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்து வா.சா.ஆ.16-ன் படி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.16-ல் 3 வது தபசில் சொத்துக்கள் என் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 3 வது தபசில் சொத்தாக 6 அயிட்டச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா வழக்கில் பரிகாரம் கேட்கும் சொத்து வா.சா.ஆ.16-ல் 3 வது தபசிலில் எத்தனை அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் 2 வது இலக்க சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது. தாவா 4 இலக்க சொத்தின் தெற்கு கிழமேல் ரோடும், மேற்கு தென்வடல் ரோடும் என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் தெற்கு பக்கம் 3. 3/4 அடியும் வடபக்கம் 4 அடியும் வரும். இதன் சர்வே எண்.101/1. வழக்குரையில் மாதிரி வரைபடத்தில் 4, 6 வது தபசில் சொத்தின் சர்வே எண்.101/2 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சர்வே எண் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.16-ல் கண்ட சொத்திற்கும் தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண் தவிர , மாதிரி வரைபடம், வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் சரியானது தான். கிழமேல் தெரு என்பது திருவள்ளுவர் கிழமேல் தெரு என்று மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது என்பது சரிதான். மேற்கே உள்ள தென்வடல் தெரு என்பது மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று தென்வடல் தெரு. வா.சா.ஆ.16-ல் 3 வது தபசிலில் கண்ட 2 வது இலக்க சொத்துக்கள் தாவா வழக்கு 4, 6 சொத்துக்களை குறிக்காது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5.-ல் தாவா 4, 6 சொத்துக்கள் என் தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5-ல் 1 வது தபசில் சொத்து என் தகப்பனாருக்கும், 5 வது தபசில் சொத்தில் 1, 2 சொத்துக்கள் எனது தாத்தா மற்றும் பாட்டி ஆகியோர்களின் ஜீவனத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களில் இந்த சொத்துக்கள் வருகிறது. 5 வது தபசில் சொத்தில் 1, 2 சொத்துக்கள் காட்டப்படவில்லை என்றும், மேற்படி வா.சா.ஆ.5-க்கும் தாவா வழக்கு 4, 6 சொத்துக்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் பிராதில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண், விஸ்தீரணம், அளவு , மால் ஆகியவை

வா.சா.ஆ.5-ல் கண்ட சொத்துக்களுடன் ஒத்துப்போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. சுப்பையா நாடாருக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. கையெழுத்து செய்த 5 நபர்கள் மட்டும் தான் தெரியும். சுப்பையா நாடாருக்கு பெண் மக்கள் உண்டு என்று கேட்டால் உண்டு ஆனால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. இராஜபாளையம் தங்கமணி மருத்துவரின் தாயார் சுப்பையா நாடாரின் மகள் என்றால் எனக்கு தெரியாது. TAM.தங்கமுத்து நாடாரின் மனைவி ஜானகியம்மாள் சுப்பையா நாடாரின் மகள் என்றால் எனக்கு தெரியாது. இதை தவிர சிவகாசியில் சுப்பையா நாடாரின் மகள் குடியிருந்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6-ல் சுப்பையா நாடாரின் ஆண் வாரிசுகள் மட்டும் தான் கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.6- பினாமி ஒழிப்புச் சட்டத்தின் கீழ் செயல்படத்தக்கதல்ல என்றும் வா.சா.ஆ.6-ன் கீழ் உரிமையோ அனுபவமோ கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது தகப்பனாருடன் உடன் பிறந்தவர்கள் மீனம்மாள், நாகரத்தினம், சுந்தரேசன் தெய்வபாக்கியம், கனகரத்தினம், தியாகராஜன், மனோன்மணி, விஜயலட்சுமி ஆகியோர்கள் ஆவார்கள். என் அப்பாவின் உடன்பிறந்தவர்களுக்குள்ளும், என் அப்பாவிற்கும் இடையே என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பாகமாகிவிட்டதா என்று கேட்டால் மகன்களுக்குள் பாகம் ஏற்பட்டுவிட்டது. என் அப்பாவின் சகோதரர்களுக்கு இடையே பாகமாக்கப்பட்ட சொத்துக்களில் கூட்டாக சில சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. என் அப்பாவிற்கும், அவருடைய சகோதரர்களுக்கும் வா.சா.ஆ.5-ல் 6 ம் இலக்க சொத்து கூட்டாக ஒதுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5-ல் கண்ட 6 ம் இலக்க சொத்து தற்போது வரை கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வருகிறதா என்று கேட்டால் இல்லை பாகம் ஆகிவிட்டது. எப்போது பிரிக்கப்பட்டது என்று கேட்டால் ஞாபகம் இல்லை. எனது அப்பா காலத்திலேயே பிரிக்கப்பட்டுவிட்டது அது இதற்கான பாகப்பத்திரம் கைவசம் இருக்கிறது அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. பாட்டி தாத்தாவிற்கு ஜீவனத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என் தாத்தா பாட்டி காலத்திற்கு பிறகு யாருக்கு சென்று அடைய வேண்டும் என்று குறிப்பிட்டு வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சாஆ.5-ல் 5, 6 இலக்க சொத்துக்களுக்கு விவசாய இடங்கள் தவிர மற்ற காலி மனைகள், வீட்டு மனைகள் ஆகியவற்றுக்கு சர்வே எண் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5-ஐ மட்டும் வைத்து சொத்து இந்த இடம் தான் காட்ட முடியாது என்றால் சரியல்ல. பிராது 4, 6 வது தபசில் சொத்து எனது தகப்பனாருக்கு ஒதுக்கும் போது காலிமனையாக இருந்ததா என்றால் குளிப்பறையும், காலிமனையுமாக இருந்தது. எனக்கு ஒதுக்கும் போதும் குளிப்பறையும், காலிமனையுமாக இருந்தது. வா.சா.ஆ.5-ன் படி 1966 ம் ஆண்டு குளியலறை இருந்ததா என்று கேட்டால் இருந்தது. எனக்கு ஒதுக்கிய சொத்து விவரத்தில் குளியலறை காட்டப்படவில்லை. காலிமனையாக தான் காட்டப்பட்டுள்ளது. பிராது 4, 6 தபசில்

சொத்துக்கள் வா.சா.ஆ.16-ன் படி எனக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் குளியலறை அதை ஒட்டியுள்ள காலிமனையும் தெளிவாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5-லும் தாவா வழக்கு 4, 6 சொத்துக்கள் குளியலறை அதை ஒட்டியுள்ள காலிமனையும் தெளிவாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.16-ல் சர்வே எண், மால், அளவுகள், விஸ்தீரணம் அமைப்பு தவறாக உள்ளது என்றும் அதனால் பிராது 4, 6 சொத்துக்களை குறிக்காது என்றால் சரியல்ல. பிராது வரைபடத்தில் 4, 6 சொத்துக்களுக்கு சர்வே எண் சரியாக தான் இருக்கிறது என்றும் ஆனால் அந்த சர்வே எண் எனக்கு சம்பந்தமில்லாதது என்பதால் வழக்கிற்காக சம்பந்தப்பட்டதாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. எங்களுடைய குடும்ப சொத்துக்கள் எவ்வாறு பாகம் பிரிக்கப்பட்டது என்று எனது உடன் பிறந்தவர்களை விசாரித்தால் உண்மை தன்மை தெரிய வரும் என்றால் சரிதான். பிராது 2 வது தபசில் சொத்தின் மாடியில் முழுமையாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டி முடித்துள்ளேன் என்றால் ஆக்கிரமிப்பு செய்யவில்லை பிரதிவாதியின் அனுமதியுடன் கட்டியுள்ளேன். பிரதிவாதி எனக்கு அனுமதி கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல தாவா வழக்கில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்றும் நான் காட்டியுள்ள 4, 6 சொத்துக்கள் பிரதிவாதிக்கு பிரதிவாதியின் தகப்பனார் கிரையம் பெற்றதன் அடிப்படையில் கிடைத்தது என்றும் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. பிராதில் இதர ஆக்கிரமிப்பு என்று காட்டப்பட்டுள்ள அமைப்புகள் எனக்கு தெரிந்த காலம் முதல் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 2 வது தபசில் சொத்தின் மாடியில் கட்டிடம் கட்ட எனக்கு அனுமதி எப்போது கொடுத்தார் என்று கேட்டால் 2011 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அனுமதி கொடுத்தார். எழுத்துமூல அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு எந்த காலத்திலும் அனுமதி கொடுத்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு 2 வருடங்கள் முன்பாக எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் சுமூகமான உறவு இல்லை. இந்த வழக்கிற்கு பிறகு தான் 2 வது தபசில் சொத்தில் மாடியில் கட்டப்பட்டுள்ள கட்டிடத்தை இடிக்க வேண்டும் என்று எதிர் கோருரிமை பரிகாரம் கோரியுள்ளார் என்றால் சரிதான். அதிலிருந்து தான் எங்களுக்குள் சுமூகமான உறவு இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது சுமூகமான உறவு இருந்தது. அதனால் இந்த வழக்கில் வழக்குமூலம் ஏற்படவில்லை என்றும் நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும் 4, 6 தபசில் சொத்துக்கள் என் பாகத்திற்கு ஒதுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எனக்கு அனுமதி கொடுத்து 2 வது தபசில் சொத்தில் கட்டிடம் கட்டியதாக கூறுவது பொய் என்று சொன்னால்

சரியல்ல. பிரதிவாதிக்கு அவர் கோரும் எதிர்கோருரிமை பரிகாரம் கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.